DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.92/2018**

Deposition of Witness

2021 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி செல்வி.M. புஷ்பராணி, B.A., B.L., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் - திரு.பூபதி **PW-3** | வயது |
| த/க பெயர் | தொழில் |
| கிராமம் | தாலூக்கா |
| மாவட்டம் | |

<u>முதல் விசாரணை:</u>-

நான் ஈரோடு வருவாய் வட்டாட்சியராக பணிபுரிந்து 31.10.2012 ம் தேதி பணி ஓய்வு பெற்று, தற்போது ஈரோடு, மாணிக்கம்பாளையம் ஹவுசிங்யூனிட், M156-ல் வசித்து வருகிறேன். கடந்த 12.08.2012 ம் தேதி TNPSC குரூப்2 தேர்வு நடைபெற்ற சமயத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பிற்பகலில் தொலைபேசி தகவல் கிடைத்ததன் பேரில் மாவட்ட வருவாய் அலுவலரைச் சந்தித்தேன். அவருடைய அறிவுறுத்தலின்பேரில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களைச் சந்தித்தேன். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)அவர்கள் ஈரோடு வருவாய்க் கோட்டாட்சியராகவும் கூடுதல் பொறுப்பு வகித்தார். அவர் பெயர் சுகுமார். அவருடைய அறையில் ரேவதி, வித்யா மற்றும் தனக்கொடி ஆகிய 3 நபர்கள் இருந்தார்கள். வித்யாவும், ரேவதியும் TNPSC குரூப் 2 தேர்வு Question paper out ஆகிவிட்டது என்று தனக்கொடியின் பேரில் புகார் கொடுக்க வந்திருந்தார்கள். வித்யா மற்றும் ரேவதி சொன்ன வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். பின்னர் தேர்வு அறைக்கண்காணிப்பாளர் ராமசாமி அவர்களிடம் விளக்கக் கடிதம் பெற்றேன். மேற்படி ஆணங்களை வைத்து

நடமாடும் குழு அலுவலர் லியாகத் அலி அவர்களிடம், நடவடிக்கை எடுப்பதற்காக அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் நடமாடும் குழு அலுவலர் லியாகத் அலிக்கு அனுப்பிய கடிதம் ஆகும். மேற்படி கடிதம் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனது கடிதத்துடன் குறிப்பிட்டு அனுப்பிய ஆவணங்கள் பின்வருவன 1. தனக்கொடியிடம் இருந்து பெறப்பட்ட கையால் எழுதப்பட்ட கேள்வித்தாள் மற்றும் நுழைவுச் சீட்டு, 2. திருமதி. வித்யா மற்றும் ரேவதி ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனு, 3. திருமதி. வித்யா மற்றும் திருமதி. ரேவதி ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூல நகல்கள், 4. திரு.ராமசாமி, முதன்மைக் கண்காணிப்பாளர், சிஎஸ்ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அவர்கள் கொடுத்த விளக்கக் கடிதத்தின் ஜெராக்ஸ். மேற்படி 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் ஏற்கனவே அ.சா.ஆ.2 முதல் 4 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது. திரு.ராமசாமி, முதன்மைக் கண்காணிப்பாளர், சிஎஸ்ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அவர்கள் கொடுத்த விளக்கக் கடிதத்தின் ஜெராக்ஸ் **அ.சா.ஆ.8** ஆக தற்போது எதிர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. இதனடிப்படையில் நடமாடும் குழு அலுவலர் லியாகத் அலி ஈரோடு நகர காவல் நிலையத்தில் புகார் அளித்து, அதனடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு குறித்து ஈரோடு நகர காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். கோவை, சிபிசிஐடி காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார். 30 வது எதிரி தனக்கொடியைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்(எதிரி ஆஜரில்லை, மனு ஏற்பு).

**1 வது எதிரி தரப்பில் கு.வி இல்லை.**

**2, 3, 4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 25, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

TNPSC குரூப் 2 தேர்வு சம்பந்தமாக மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி எனக்கு எந்த உத்தரவும் பணியாற்றுவதற்கு கிடைக்கவில்லை என்றால், சரிதான், தாசில்தார் என்ற முறையில் நான் எல்லா வேலைகளையும் செய்யலாம். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் ஈரோடு வருவாய்க் கோட்டாட்சியர் திரு. சுகுமார் அவர்கள் வாக்குமூலம் பெறச்சொல்லி எனக்கு எழுத்து மூலமான எந்த உத்தரவும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். சிஎஸ்ஐ ஆண்கள்

மேல்நிலைப்பள்ளியில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் எஸ்கார்டுக்கு நியமிக்கப்பட்டிருந்தார் என்றால், சரிதான். வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், சிஎஸ்ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கும் ½ கி.மீ. தூரம் இருக்கும் என்றால், சரிதான். சி.எஸ்.ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வட்டாட்சியர் அலுவலகம், நகர காவல் நிலையம் மூன்றும் அருகருகே உள்ளது என்றால், சரிதான். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் ஈரோடு வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள் என்னை எத்தனை மணிக்கு அழைத்தார், நான் எத்தனை மணிக்கு ஆஜர் ஆனேன் என்பது குறித்து போலீசாரிடம் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான், தொலைபேசி வழியாகத்தான் அழைத்தார்கள். நான், நேர்முக உதவியாளரை சந்திப்பதற்கு முன்பாகவே வித்யா, தனக்கொடி, ரேவதி ஆகிய மூவரும் அவரது அறையில் இருந்தார்கள் என்றால், சரிதான். நான் செல்வதற்கு முன்பாகவே மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களிடம் புகார் கொடுக்கப்பட்டு விட்டது என்றால், சரியல்ல, விசாரித்துக் கொண்டுதான் இருந்தார். நான் சென்ற பின்புதான் புகார் கொடுத்தார்கள் என்றால், சரிதான். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்கள் வித்யா மற்றும் ரேவதியிடம், காவல் துறையிடம் புகார் கொடுக்க அறிவுறுத்தினாரா என்றால், அதுபற்றி எனக்கு நினைவு இல்லை. அ.சா.ஆ.3 புகார் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அ.சா.ஆ.3 புகார் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால், ஞாபகம் இல்லை. அ.சா.ஆ 3 எங்கு தயாரிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. நானும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களும் விசாரித்த பின்பு எவ்வளவு நேரம் கழித்து புகார் கொடுத்தார்கள் என்றால், சரியான நேரம் எனக்குத் தெரியாது. அ.சா.ஆ.3 புகாரை, நான் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன்பு கொடுத்தார்களா, பின்பு கொடுத்தார்களா என்று நினைவு இல்லை. அ.சா.ஆ.3 புகாரில் சந்தேகப்படும் வகையில் நடவடிக்கைகள் இருப்பதாக உணர்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அ.சா.ஆ.3 புகாரைப் பெற்ற பிறகு, ரேவதி மற்றும் வித்யாவிடம் இரவு சுமார் 8 மணியளவில் வாக்குமூலம் பதிவு செய்தேன். அ.சா.ஆ.8 விளக்கக் கடிதத்தில் சென்டர் நம்பர் 61 ஹால் நம்பர் 30ல் TNPSC தேர்வு சிஎஸ்ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நல்லமுறையில் எவ்வித புகாரும் இன்றி தேர்வு நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால், சரிதான். ஈரோடு, சிஎஸ்ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் ஹால் 30ல் முற்பகல் 10 மணி முதல் 1 மணி வரை 15

அறைகளில் 245 Candidates எவ்வித புகாரும் இன்றி எழுதி முடித்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், சரிதான். தேர்வு எழுதும் வரை எவ்வித பிரச்சனையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால், சரிதான். வாக்குமூலங்கள் எழுதி முடிக்கப்பட்டவுடன், நடமாடும் குழு அலுவலர் லியாகத் அலியிடம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதா என்றால், என்னுடைய அலுவலகத்தில் எழுத வேண்டியதை எழுதி முடித்துவிட்டு பின்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து ஒப்படைத்தேன். TNPSC அலுவலர்கள் அன்றைய தினம் மாவட்டத்திற்கு வந்திருந்தார்கள் என்றால், சரிதான். அவர்களுக்கு என்னுடைய அலுவலகத்திலிருந்து நான் விசாரித்தது குறித்து எந்த தகவலும் அனுப்பப்படவில்லை. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து TNPSC அலுவலர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் காட்டப்படவில்லை. வருவாய்த்துறை நிலை ஆணைகளின்படி நாங்கள் நாட்குறிப்பு பயன்படுத்த வேண்டும் என்றால், சரிதான். வருவாய் வட்டாட்சியர் என்ற முறையில் குற்ற சம்பவம் நடந்தால் Crime Memo மூலமாக காவல் துறைக்கு தகவல் கொடுக்கலாம் என்றால், சரிதான். என்னை ஈரோடு நகர காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொல்லி யாரும் அறிவுறுத்தினார்களா என்றால், இல்லை, தேர்விற்கு அலுவலர் இருந்ததால் அவர் புகார் கொடுத்தார். நான், ரேவதி மற்றும் வித்யா ஆகியோரிடம் வாக்குமூலம் பெற்ற பின்பு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு தகவல் ஏதும் கொடுக்கவில்லை. நான் சொன்ன தேதியில், நேரத்தில், விதத்தில் ரேவதி மற்றும் வித்யா ஆகியோரிடம் வாக்குமூலங்கள் எதுவும் பெறவில்லை என்றாலும், அவர்கள் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், நான் சொன்ன நேரத்தில், விதத்தில் திரு.லியாகத் அலி அவர்களிடம் ஆவணங்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும், பின்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காவலர்கள் முன்பு வைத்து அனைத்து ஆவணங்களும் தயார் செய்யப்பட்டது என்றாலும், சரியல்ல. 14.08.2012 அன்று என்னை ஈரோடு நகர காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றால், சரிதான். அதில் ரேவதி மற்றும் வித்யா ஆகியோர்களிடம் வினாத்தாள் வெளியான விவரம் குறித்து தனித்தனியே என் முன்பாக வாக்குமூலம் பதிவு செய்து கையொப்பம் பெறப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அந்த வாக்குமூலங்களை நான் விசாரிக்க விசாரிக்க, ரேவதி மற்றும் வித்யா ஆகியோரால்

சொன்னதை எனது கைப்பட வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டது என்று சொல்லவில்லை என்றால், சரிதான். ரேவதி மற்றும் வித்யா ஆகியோரின் வாக்குமூலம் எழுதப்பட்ட கையெழுத்து என்னுடையது அல்ல என்றால், சரியல்ல. காவல் ஆய்வாளரின் விசாரணையில் ராமசாமியிடம் விளக்கக் கடிதம் என்னால் பெறப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால், சரிதான். ராமசாமி என்பவரிடம் விளக்கக் கடிதம் கேட்டு நான் வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். வேண்டுகோள் கடிதம் யாரும் கொடுக்கவில்லை. வாய்மொழியாக கேட்டதன் பேரில் விளக்கக் கடிதம் கொடுத்தார். ஹால்டிக்கெட் நகல், தனக்கொடி வைத்திருந்த வினாத்தாள் நகல் ஆகியவற்றை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன் என்பதற்கு அவர்களுக்கு ஒப்புகை எதுவும் கொடுக்கவில்லை. தனக்கொடியிடம் கைப்பற்றப்பட்ட கேள்வி எண்.131, 133 முதல் 170 வரையிலான கையால் எழுதப்பட்ட கேள்விபதில்கள் ஜெராக்ஸ் காப்பி குறித்து குறிப்பாக காவல் ஆய்வாளர் ஈரோடு அவர்கள் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால், சரிதான். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தபோது சம்மன் கொடுத்தார்கள். சிபிசிஐடி போலீசார் ஈரோட்டில் வைத்து விசாரித்தார்களா, கோயம்புத்தூரில் வைத்து விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்ன முறையில் சிபிசிஐடி போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல.

**2, 3, 4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 25, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை** 10, 13, 14, 15, 16, 20, 21 மற்றும் 17 எதிரிகள் தரப்பில் **ஏற்றுக் கொள்ளப்பட்டது.**